**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 170** **நாள்: 01.11.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் கூடுதலாக 50 வாகனங்களில் பொருத்தப்பட்ட புகைப்பரப்பும் இயந்திரங்களை கொண்டு கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவு !**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் கடந்த 2 மாதங்களில் சுகாதாரமற்ற இடங்களாக கண்டறியப்பட்ட இடத்தின் உரிமையாளர்களுக்கு ரூ.22.50 இலட்சம் அபராதம் விதிப்பு !!**

**தமிழகத்தில் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நோய்த்தடுப்பு மற்றும் டெங்கு விழிப்புணர்வு பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தகவல் !!!**

*********

தமிழகத்தில் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நோய்த்தடுப்பு மற்றும் டெங்கு விழிப்புணர்வு பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் இன்று (01.11.2018) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

ஆய்வுக்கூட்டத்தின் போது, தமிழகத்தில் பருவமழை துவங்கியுள்ள நிலையில் பொதுமக்களுக்கு சளி, இருமல் மற்றும் காய்ச்சல் போன்ற பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, இந்நோய் பரவாமல் கட்டுப்படுத்தவும், கொசுப்புழுக்களின் உற்பத்தியைத் தடுக்கவும், உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட 12 மாநகராட்சிகளும், 124 நகராட்சிகளும், 528 பேரூராட்சிகளும் உள்ளன. மேற்கண்ட உள்ளாட்சி அமைப்புகளில் பருவமழைக் காலங்களில் பொதுமக்களுக்கு ஏற்படும் நோய்களிலிருந்து பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 14 பெருநகர சமுதாய நல மருத்துவமனைகள் மற்றும் 3 இருபத்து நான்கு மணிநேர அவசரகால மகப்பேறு மருத்துவமனைகள் ஆகிய மருத்துவமனைகளில் பொதுமக்களுக்கு சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையின் சார்பில் 3,314 மலேரியா தொழிலாளர்களைக் கொண்டு நோய்த்தடுப்பு பணிகளும், 2,035 பணியாளர்களைக் கொண்டு ஒவ்வொரு வீடுகளிலும் கொசு ஒழிப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், 1.5 மெட்ரிக் டன் நிலவேம்பு, 6000 டாமிஃபுளூ மாத்திரைகள் மற்றும் 900 பன்றிக்காய்ச்சல் தடுப்பூசிகளும், 712 லி. பைரித்ரம், 1,816 லி. அபேட் கிருமிநாசினி மருந்துகளும், 39 வாகனங்களில் பொருத்தப்பட்ட புகைப்பரப்பும் இயந்திரங்கள், 335 கையினால் எடுத்துச்

செல்லப்படும் புகைப்பரப்பும் இயந்திரங்களைக் கொண்டு கொசு ஒழிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. **இத்துடன் மேலும், கூடுதலாக 50 வாகனங்களில் பொருத்தப்பட்ட புகைப்பரப்பும் இயந்திரங்களை கொண்டு காலை மற்றும் மாலை ஆகிய இருவேளைகளில் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. இதுநாள்வரை 715 சிறப்பு முகாம்கள் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக நடத்தப்பட்டு பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் தனியார் காலிமனைகளில் காணப்படும் தேவையற்ற பொருட்கள் மற்றும் குப்பைகளை உரிமையாளர்களே அகற்ற மாநகராட்சியால் தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், பொதுமக்களுக்கு சுகாதாரக் சீர்கேடு ஏற்படாவண்ணம் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பாக, கூடுதலாக 40 சிறு வாகனங்களைக் கொண்டு காலிமனைகளில் காணப்படும் தேவையற்ற பொருட்கள் மற்றும் குப்பைகளை அகற்ற உத்தரவிடப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியில் கடந்த 2 மாதங்களில் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் நோய்த்தடுப்பு ஆய்வுப்பணிகளின் போது, சுகாதாரமற்ற இடங்களாக கண்டறியப்பட்ட இடத்தின் உரிமையாளர்களுக்கு ரூ.22.50 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.**

தமிழகத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக, மீதமுள்ள 11 மாநகராட்சிகளில் 1,204 மருத்துவப் பணியாளர்களைக் கொண்டு நோய்த்தடுப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 7,430 இடங்களில் பெருந்திரள் தூய்மைப்பணி முகாமும், 37,694 காலியிடங்கள், 2,523 பழுதடைந்த கட்டடங்கள், 9,527 புதிய கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடங்கள், 13,107 ஆளில்லா வீடுகள் மற்றும் கட்டடங்கள் ஆகியவற்றில் தூய்மைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தூய்மைப் பணிகளின் போது சுகாதாரமற்ற இடங்கள் கண்டறியப்பட்டு உரிமையாளர்களுக்கு ரூ.10 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இம்மாநகராட்சிகளில் 7,056 லி. பைரித்ரம், 5,624 லி. அபேட் கிருமிநாசினி மருந்துகளும், 1036 புகைப்பரப்பும் இயந்திரங்களும் இருப்பில் உள்ளன. மேலும், இதுநாள்வரை 5,587 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களிடையே நோய் மற்றும் காய்ச்சல் தடுப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 5,160 பள்ளிகளில் உள்ள 14,69,095 மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 124 நகராட்சிகளில் 1,980 மருத்துவப் பணியாளர்களைக் கொண்டு நோய்த்தடுப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 9,938 இடங்களில் பெருந்திரள் தூய்மைப்பணி முகாமும், 12,833 காலியிடங்கள், 912 பழுதடைந்த கட்டடங்கள், 2,596 புதிய கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடங்கள், 3,836 ஆளில்லா வீடுகள் மற்றும் கட்டடங்கள் ஆகியவற்றில் தூய்மைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தூய்மைப் பணிகளின் போது சுகாதாரமற்ற இடங்கள் கண்டறியப்பட்டு உரிமையாளர்களுக்கு ரூ.1.07

இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சிகளில் 9,851 லி. பைரித்ரம், 8,656 லி. அபேட் கிருமிநாசினி மருந்துகளும், 1,571 புகைப்பரப்பும் இயந்திரங்களும் இருப்பில் உள்ளன. மேலும், இதுநாள்வரை 4,868 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களிடையே நோய் மற்றும் காய்ச்சல் தடுப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 3,899 பள்ளிகளில் உள்ள 18,89,895 மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 528 பேரூராட்சிகளில் 7,024 மருத்துவப் பணியாளர்களைக் கொண்டு நோய்த்தடுப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 13,452 இடங்களில் பெருந்திரள் தூய்மைப்பணி முகாமும், 4,536 காலியிடங்கள், 451 பழுதடைந்த கட்டடங்கள், 3,740 புதிய கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடங்கள், 10,253 ஆளில்லா வீடுகள் மற்றும் கட்டடங்கள் ஆகியவற்றில் தூய்மைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தூய்மைப் பணிகளின் போது சுகாதாரமற்ற இடங்கள் கண்டறியப்பட்டு உரிமையாளர்களுக்கு ரூ.16,400 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இப்பேரூராட்சிகளில் 8,240 லி. பைரித்ரம், 4,530 லி. அபேட் கிருமிநாசினி மருந்துகளும், 2,131 புகைப்பரப்பும் இயந்திரங்களும் இருப்பில் உள்ளன. மேலும், இதுநாள்வரை 670 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களிடையே நோய் மற்றும் காய்ச்சல் தடுப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 1,331 பள்ளிகளில் உள்ள 1,76,903 மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது **என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தெரிவித்தார்.**

இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள், நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி சுகர்லா உஷா, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.பழனிச்சாமி, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் மகேஸ்வரன், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., துணை ஆணையர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., துணை ஆணையர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., வட்டார துணை ஆணையர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**